**டிசம்பர் – 27**

# TNPSC துளிகள்

- உலக வங்கியால் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஜல் சக்தித் துறை அமைச்சகத்தின் மத்திய அரசுத் திட்டமான அடல் புஜல் திட்டத்தைப் பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
    - நிலத்தடி நீர் வளத்தைப் பாதுகாக்கவும் மேம்படுத்தவும் குஜராத், ஹரியானா, கர்நாடகா, மத்தியப் பிரதேசம், மகாராஷ்டிரா, ராஜஸ்தான் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய 7 மாநிலங்களில் இந்தத் திட்டமானது செயல்படுத்தப்பட இருக்கின்றது.
- தில்லி முதல்வரான அரவிந்த் கெஜ்ரிவால் தில்லியை மின்சார வாகனங்களின் தலைநகராக மாற்றுவதற்காக ஒரு புதிய கொள்கையை அறிமுகப் படுத்தியுள்ளார்.
    - இந்தக் கொள்கையின் கீழ், மின்சார வாகனங்களுக்கு மானியம் வழங்க தில்லி அரசு திட்டமிட்டுள்ளது.

# தேசியச் செய்திகள்

## இந்தியாவின் முதலாவது திருநர் பல்கலைக் கழகம்

- திருநர் சமூகத்திற்கான இந்தியாவின் முதலாவது பல்கலைக் கழகமானது உத்தரப் பிரதேசத்தின் குஷிநகர் மாவட்டத்தில் திறக்கப்பட இருக்கின்றது.
- திருநர் சமூக உறுப்பினர்கள் கல்வியைப் பெறுவதற்காக நாட்டில் அமைய இருக்கும் இதே வகையைச் சேர்ந்த முதலாவது பல்கலைக்கழகம் இதுவாகும்.
- இந்தப் பல்கலைக் கழகமானது அகில பாரதிய கின்னார் சிக்சா சேவா அறக்கட்டளையால் (அகில இந்திய திருநர் கல்விச் சேவை அறக்கட்டளை) கட்டப்பட்டு வருகின்றது.
- இந்தப் பல்கலைக்கழகமானது இச்சமூகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கு 1 ஆம் வகுப்பு முதல் முதுகலை படிப்பு வரை படிக்கவும் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெறவும் வழிவகை செய்கின்றது.

## உலகளாவிய அஞ்சல் ஒன்றியம்

- உலகளாவிய அஞ்சல் ஒன்றியத்தின் (Universal Postal Union - UPU) அரசியலமைப்பில் கூடுதலாக இணைக்கப்பட உள்ள பத்தாவது நெறிமுறைக்கு ஒப்புதல் அளிப்பதற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது.
- UPU நிறுவனமானது டெலிமாடிக்ஸ் மற்றும் விரைவு அஞ்சல் சேவை கூட்டுறவு அமைப்பையும் மேற்பார்வையிடுகின்றது.
- இந்த ஒப்புதலானது இந்தியாவில் UPU அமைப்பு ஒப்பந்தத்தின் விதிகளை அமல்படுத்துவதற்கான எந்தவொரு நிர்வாக உத்தரவுகளையும் வெளியிடுவதற்கு அஞ்சல் துறைக்கு உதவ இருக்கின்றது.

***UPU பற்றி***

- இது 1874 ஆம் ஆண்டு பெர்ன் ஒப்பந்தத்தால் நிறுவப்பட்டது.
- இது ஐக்கிய நாடுகள் சபையின் ஒரு சிறப்பு நிறுவனமாகும்.

- இதன் தலைமையகம் சுவிட்சர்லாந்தின் பெர்னில் அமைந்துள்ளது.
- UPU ஆனது நிர்வாகச் சபை (காங்கிரஸ்), நிர்வாக மன்றம், அஞ்சலகச் செயல்பாட்டு மன்றம் மற்றும் சர்வதேசப் பணியகம் ஆகிய நான்கு அமைப்புகளைக் கொண்டு உள்ளது.

## சிறந்த நிர்வாகக் குறியீடு 2019

- 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 25 அன்று அனுசரிக்கப்பட்ட "சிறந்த ஆளுகை தினத்தின்" போது 'சிறந்த நிர்வாகக் குறியீட்டின்' சமீபத்திய பதிப்பானது வெளியிடப் பட்டுள்ளது.
- இந்தியாவின் முன்னாள் பிரதமரான அடல் பிகாரி வாஜ்பாயின் பிறந்த தினத்தில் (டிசம்பர் 25) சிறந்த ஆளுகை தினமானது அனுசரிக்கப்படுகின்றது.
- இத்தினமானது 2014 ஆம் ஆண்டில் முதன்முறையாக அனுசரிக்கப்பட்டது.




**Composite Ranking**

| # | Big States | Score | NE & Hill | Score | UTs | Score |
|---|---|---|---|---|---|---|
| 1 | Tamil Nadu | 5.62 | Himachal Pradesh | 5.22 | Pondicherry | 4.69 |
| 2 | Maharashtra | 5.40 | Uttarakhand | 4.87 | Chandigarh | 4.68 |
| 3 | Karnataka | 5.10 | Tripura | 4.50 | Delhi | 4.39 |
| 4 | Chhattisgarh | 5.05 | Mizoram | 4.41 | Daman & Diu | 4.33 |
| 5 | Andhra Pradesh | 5.05 | Sikkim | 4.21 | A&N Islands | 4.12 |
| 6 | Gujarat | 5.04 | Assam | 4.07 | D&N Haveli | 3.12 |
| 7 | Haryana | 5.00 | J & K | 4.04 | Lakshadweep | 2.97 |
| 8 | Kerala | 4.98 | Manipur | 3.93 | | |
| 9 | Madhya Pradesh | 4.85 | Meghalaya | 3.81 | | |
| 10 | West Bengal | 4.84 | Nagaland | 3.55 | | |
| 11 | Telangana | 4.83 | Arunachal Pradesh | 3.03 | | |
| 12 | Rajasthan | 4.80 | | | | |
| 13 | Punjab | 4.57 | | | | |
| 14 | Orissa | 4.44 | | | | |
| 15 | Bihar | 4.40 | | | | |
| 16 | Goa | 4.29 | | | | |
| 17 | Uttar Pradesh | 4.25 | | | | |
| 18 | Jharkhand | 4.23 | | | | |

***GGI***

- சிறந்த ஆளுகைக் குறியீடு (Good Governance Index - GGI) என்பது ஆளுகையின் நிலை மற்றும் மாநில அரசு & ஒன்றியப் பிரதேசங்கள் ஆகியவற்றால் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திட்டங்களின் தாக்கத்தை மதிப்பிடுவதற்கான ஒரு கருவியாகும்.
- GGI ஆனது மத்தியப் பணியாளர் நலன், பொதுமக்கள் குறை தீர்ப்பு மற்றும் ஓய்வூதியங்கள் அமைச்சகத்தின் கீழ் உள்ள நிர்வாகச் சீர்திருத்தங்கள் மற்றும் பொது

மக்கள் குறை தீர்ப்புத் துறையினால் வெளியிடப்பட்டது.

- இந்தக் குறியீட்டில் தமிழகம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. இந்தக் குறியீட்டில் தமிழ்நாட்டிற்கு அடுத்து மகாராஷ்டிரா, கர்நாடகா, சத்தீஸ்கர் மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.
- GGI ஆனது 10 பிரிவுகளின் கீழ் மாநிலங்களைத் தரவரிசைப் படுத்தியுள்ளது.
- இந்த பத்து நிர்வாகப் பிரிவுகள் மொத்தம் 50 குறிகாட்டிகளைக் கொண்டு அளவிடப் படுகின்றன.
- மாநிலங்கள் மற்றும் ஒன்றியப் பிரதேசங்கள் மூன்று குழுக்களாகப் பிரிக்கப் பட்டுள்ளன: அ) பெரிய மாநிலங்கள் ஆ) வடகிழக்கு மற்றும் மலைப் பிரதேச மாநிலங்கள் மற்றும் இ) ஒன்றியப் பிரதேசங்கள்.

***துறை வாரியான தரவரிசை:***

- சுற்றுச்சூழல்:
    - சுற்றுச்சூழல் பிரிவில் மேற்கு வங்கம், கேரளா மற்றும் தமிழ்நாடு ஆகிய மாநிலங்கள் முதல் மூன்று இடங்களில் தரவரிசைப் படுத்தப்பட்டுள்ளன.
    - வடகிழக்கு மற்றும் மலைப் பிரதேச மாநிலங்களில் ஜம்மு காஷ்மீர் முதலிடத்தில் உள்ளது.
- நீதித்துறை மற்றும் பொதுப் பாதுகாப்புத் தரவரிசை:
    - நீதித்துறை மற்றும் பொதுப் பாதுகாப்புத் தரவரிசையில் தமிழகம் முதலிடத்தில் உள்ளது. இப்பிரிவின் கடைசி இடத்தில் மேற்கு வங்கம் உள்ளது.
- பொருளாதார நிர்வாகம்:
    - பொருளாதார நிர்வாகப் பிரிவில் கர்நாடக மாநிலம் முதலிடத்தில் உள்ளது.
- சுகாதாரம்:
    - பொதுச் சுகாதாரத் துறையில் கேரளா மாநிலம் முதலிடத்தில் உள்ளது. அதைத் தொடர்ந்து தமிழ்நாடு மற்றும் கோவா ஆகியன உள்ளன.
- பொது உள்கட்டமைப்பு வசதிகள்:
    - தமிழகம் மற்றும் இமாச்சலப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் முறையே பெரிய மாநிலங்கள் மற்றும் மலைப் பிரதேச மாநிலங்கள் ஆகிய குழுக்களில் முதலிடங்களில் உள்ளன.
- சமூக நலன் மற்றும் மேம்பாட்டுத் துறை:
    - பெரிய மாநிலங்களில் சத்தீஸ்கர் முதலிடத்தில் உள்ளது.

***தமிழ்நாடு – ஒரு பார்வை***

- சுற்றுச்சூழல் (3)
- மனித வள மேம்பாடு (5)
- பொருளாதார நிர்வாகம் (5)
- சமூக நலன் மற்றும் மேம்பாட்டுத் துறை (7)
- விவசாயம் மற்றும் அது தொடர்பான துறைகள் (9)
- வர்த்தகம் மற்றும் தொழில்துறை (14)

## முப்படைகளின் தலைமைத் தளபதி என்ற பதவி – உருவாக்கம்

- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான பாதுகாப்பிற்கான அமைச்சரவைக்

குழுவானது முப்படைகளின் தலைமைத் தளபதி (chief of defence staff - CDS) என்ற ஒரு புதிய பதவியை உருவாக்க ஒப்புதல் அளித்துள்ளது.

- CDS பதவியில் உள்ளவர் 1999 ஆம் ஆண்டில் உருவாக்கப் பட்ட கார்கில் மறுஆய்வுக் குழு பரிந்துரைத்த படி, மத்திய அரசின் ஒற்றை இராணுவ ஆலோசகராகச் செயல்பட இருக்கின்றார்.
- CDS பதவியில் உள்ளவர் மூன்று படைகளின் பணிகளை மேற்பார்வையிட்டு, அவற்றை ஒருங்கிணைக்க இருக்கின்றார்.
- CDS பதவியில் உள்ளவர் முப்படைத் தலைவர்களிடையே 'சமமானவர்களில் முதன்மையானவர்' என்று விவரிக்கப் படுகின்றார்.
- CDS பதவிக்கு தகுதியானவர் இந்திய ஆயுதப்படைகளான இராணுவம், விமானப் படை அல்லது கடற்படை ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றிலிருந்து நான்கு நட்சத்திரக் குறிகளைப் பெற்ற ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்டுச் செயல்பட இருகின்றார்.




***பாதுகாப்புத் துறை தொடர்பான அமைச்சரவைக் குழுவில் உள்ள உறுப்பினர்கள்.***

- இந்தக் குழுவின் தலைவர் - பிரதமர்
- மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர்
- மத்திய உள்துறை அமைச்சர்
- மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்கள் துறை அமைச்சர்.
- மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர்.

## 2024 ஆம் ஆண்டில் டிஜிட்டல் வானொலி

- 2024 ஆம் ஆண்டில் இந்தியாவில் டிஜிட்டல் வானொலியை அறிமுகப்படுத்துவதன் மூலம் 'ஆகாஷ்வானி' என்று அதிகாரப்பூர்வமாக அழைக்கப்படும் 'அகில இந்திய வானொலியைப்' புதுப்பிக்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.
- இந்தத் தகவலானது புது தில்லியில் நடைபெற்ற வருடாந்திர ஆகாஷ்வானி விருதுகள் வழங்கும் விழாவின் போது மத்தியத் தகவல் தொழில்நுட்ப மற்றும் ஒளிபரப்புத் துறை அமைச்சரான பிரகாஷ் ஜவடேகரால் தெரிவிக்கப் பட்டது.




*அகில இந்திய வானொலி (AIR) பற்றி*

- AIR ஆனது 1930 ஆம் ஆண்டில் நிறுவப் பட்டது.
- இது 1956 ஆம் ஆண்டு முதல் ஆகாஷ்வானி ("வானிலிருந்து குரல்") என்று அதிகாரப் பூர்வமாக அழைக்கப் படுகின்றது.
- AIR என்பது பிரசார் பாரதியின் தூர்தர்ஷன் தொலைக்காட்சி அமைப்பின் சகோதரப் பிரிவாகும்.
- இந்தியாவின் மிகப்பெரிய பொது ஒளிபரப்பு நிறுவனம் பிரசார் பாரதி ஆகும்.

## டிஜிட்டல் கிராம குருவாரா

- மத்திய தகவல் தொடர்பு மற்றும் தொழில்நுட்பத் துறை அமைச்சரான ரவிசங்கர் பிரசாத் "டிஜிட்டல் கிராம குருவாராவைத்" திறந்து வைத்தார்.
- இந்தத் தொடக்க விழாவின் போது, 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை அனைத்து கிராமங்களுக்கும் இலவச வைஃபை (அருகலை) சேவைகளை வழங்க மத்திய அரசு திட்டமிட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.
- பாரத்நெட் என்ற திட்டத்தின் கீழ் இலவச வைஃபை (அருகலை) சேவைகள் அறிவிக்கப் படுகின்றன.

*பாரத்நெட் திட்டம்*

- இந்த முயற்சியானது 2011 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது.
- கிராமப் புறங்களில் உள்ள அனைத்து வீடுகளுக்கும் எதிர்காலத்தில் இணையத்தின் வேகத்தை சுமார் 2 முதல் 20 Mbps வரை உயர்த்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.
- இந்தத் திட்டமானது ஒரு தேசிய ஒளியியல் இழை அமைப்புத் திட்டமாகும்.
- டிஜிட்டல் இந்தியா வெற்றி பெறுவதற்கு இது ஒரு முக்கிய முயற்சியாகப் பார்க்கப் படுகின்றது.
- இது மத்திய தொலைத் தொடர்புத் துறை அமைச்சகத்தால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

# சர்வதேசச் செய்திகள்

## பாகிஸ்தானுக்கு போலியோ மருந்துக் குறிப்பான்கள்

- இந்தியாவில் இருந்து போலியோ மருந்துக் குறிப்பான்களை இறக்குமதி செய்ய பாகிஸ்தான் அரசு சமீபத்தில் முடிவு செய்துள்ளது.

- இந்தியா 370வது பிரிவை ரத்து செய்த பின்னர், புது தில்லியுடனான இந்த மருந்து குறிப்பான்கள் மீதான வர்த்தகத்தை பாகிஸ்தான் அரசு பல மாதங்களுக்கு நிறுத்தி வைத்து இருந்தது.

***போலியோ குறிப்பான்கள்***

- உலக சுகாதார அமைப்பால் அங்கீகரிக்கப் பட்ட தடுப்பூசிகளைக் கொண்டு தடுப்பூசி போடப்பட்ட பின்னர், குழந்தைகளின் விரல்களில் குறிப்பதற்காக போலியோ மருந்துக் குறிப்பான்கள் பயன்படுத்தப் படுகின்றன.




***போலியோ பற்றி***

- இந்த நோயானது போலியோ வைரஸால் ஏற்படுகின்றது.
- 1995 ஆம் ஆண்டில், இந்தியா WHOன் உலகளாவிய போலியோ ஒழிப்பு முயற்சியைத் தொடங்கியது. இது 100% போலியோ ஒழிப்பை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இந்த திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்தப் பட்டதன் மூலம் போலியோவை இந்தியா முற்றிலுமாக ஒழித்துள்ளது.
- இந்தியாவில் போலியோ நோய் பாதிப்பானது கடைசியாக 2011 ஆம் ஆண்டில் பதிவாகியது.
- உலகில் போலியோ நோய் பாதிப்புகள் இன்னமும் மூன்று நாடுகளில் காணப் படுகின்றன.
- அந்த நாடுகளாவன: பாகிஸ்தான், நைஜீரியா மற்றும் ஆப்கானிஸ்தான்.

# மாநிலச் செய்திகள்

## "கோப்புகளைப் பின்தொடர்ந்து கண்காணித்தல்" என்ற செயல்முறை

- ஹரியானா மாநில அரசு மையப்படுத்தப்பட்ட கோப்புகளின் நகர்வு மற்றும் கண்காணிப்புத் தகவல் அமைப்பில் (Centralised File Movement and Tracking Information System - CFMS) "கோப்புகளைப் பின்தொடர்ந்து கண்காணித்தல்" என்ற ஒரு புதிய வசதியை அறிமுகப் படுத்தியுள்ளது.
- இது ஹரியானா மாநில முதல்வரால் தனிப்பட்ட முறையில் கண்காணிக்கப்பட இருக்கின்றது.
- ஒரு கோப்பானது CFMSல் அம்மாநில முதல்வரால் மட்டுமே "கோப்புகளைப் பின்தொடர்ந்து கண்காணித்தல்" என்பதாகக் குறிக்கப்படும்.

# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்

## ஷாஹீத் உதம் சிங்கின் 120வது பிறந்த தினம்

- 2019 ஆம் ஆண்டு டிசம்பர் 26 அன்று அனுசரிக்கப்பட்ட சிறந்த புரட்சியாளரும் விடுதலைப் போராட்ட வீரருமான ஷாஹீத் உதம் சிங்கின் 120வது பிறந்த தினத்தின் போது இந்தியா அவருக்கு மரியாதை செலுத்தியது.
- இவர் 1899 ஆம் ஆண்டில் இந்த தினத்தில் பஞ்சாபின் சங்ரூர் மாவட்டத்தில் பிறந்தார்.
- இவர் காதர் கட்சியைச் சேர்ந்தவர் ஆவார்.
- 1919 ஆம் ஆண்டு ஏப்ரல் 13 அன்று பைசாகி திருவிழாவின் (அறுவடைத் திருவிழா) போது அமிர்தசரசில் உள்ள ஜாலியன்வாலாபாக் நகரில் இவரும் இடம் பெற்றிருந்தார்.
- ஜெனரல் டயர் என்பவர் நிராயுதபாணியான இந்தக் கூட்டத்தின் மீது எந்தவித முன் எச்சரிக்கையும் இல்லாமல் துப்பாக்கிச் சூடு நடத்தினார்.
- இந்தக் கொடூரமான படுகொலையில் பலர் உயிர் இழந்தனர்.
- இவர் 1940 ஆம் ஆண்டில் மார்ச் மாதத்தில் மைக்கேல் ஓ டயரை படுகொலை செய்ததன் மூலம் ஜாலியன்வாலா பாக் படுகொலைக்கு பழிவாங்கியதற்காக மிகவும் சிறப்பாக அறியப் படுகின்றார். அதற்காக இவர் லண்டனில் ஆங்கிலேயர்களால் தூக்கிலிடப் பட்டார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★